# ஜெபத்திற்காக விடப்படும் ஓர் அழைப்பு

சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

1

படங்களுடன்



நான் உண்மையிலேயே அதிகாலையில் எழுந்து, காரியங்கள் என்னைக் கலக்குவதற்கு முன்னர், நான் ஜெபத்திற்குச் சென்று பகல் எல்லாம் ஜெபித்துக் கொண்டிருப்பேன்.

மூன்றாவது முத்திரை, 63–0320, பத்தி எண் 231-4{18}

பாருங்கள், ஜெபம் காரியங்களை மாற்றிப்போடும். உன்னுடைய புருஷனையோ அல்லது இரட்சிக்கப்படாத உன்னுடைய ஒருவனை தேவனுடைய சமூகத்தில் வைத்து, பின்பு ஜெபிப்பாயானால், தேவன் எங்காவது ஒரு வழியை உண்டு பண்ணுவார். ஏனென்றால் அதைச் செய்வதாக வாக்களித்துள்ளார்.

அவர் இந்த வழியே கடந்து செல்ல வேண்டியிருந்தது,

64-0321 B, பத்தி எண் 54



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

நீங்கள் பாருங்கள், ஒருவருக்காக நீங்கள் ஜெபிக்கப் போகும்போது, அங்கு ஏதோவொன்று சம்பவிக்கப் போகிறது. நண்பர்களே, நாம் ஜெபிப்பதில்லை; அங்குதான் நாம் தோல்வியடைகிறோம். ஜெபம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இயேசு யார்?, 64-0620 B, பத்தி எண் 100

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**


“என் இருதயத்தில் அக்கிரம சிந்தை
கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச்
செவிகொடார்” என்று தாவீதும்
சொல்லியிருக்கிறான்.
அறுப்பின் நேரம், 64-1212, பத்தி எண் 216
வில்லியம் மரியன் பிரன்ஹாம்

உத்தமமமான ஒவ்வொரு ஜெபத்திற்கும் தேவன் பதிலளிக்கிறார். (அதை நான் விசுவாசிக்கிறேன்.) அவருடைய சொந்த வழியில் பதிலளிக்கிறார்.

நீ இதை விசுவாசிக்கிறாயா?, 50-0115, பத்தி எண் E-25

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**



**எல்லாவற்றையும் புறம்பே தள்ளுங்கள். உங்களால் முடிந்த அளவிற்கு தேவனிடம் நெருங்கி வாருங்கள். அவரோடு நடங்கள், அவரோடு பேசுங்கள். உங்கள் ஜெப ஜீவியம் முதலாவது இருக்கட்டும், மற்றவை எல்லாமும் இரண்டாவதாக இருக்கட்டும். எல்லா நேரங்களிலும் அவரோடு சீர்பொருந்தியிருங்கள்.**

சாட்சி, 50-0814, பத்தி எண் E-9

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

நான் ஒருபோதும் ஐசுவரியவானாக விருப்பம் கொண்டது கிடையாது. நான்... அது சாலமோன் என்று நான் – நான் விசுவாசிக்கிறேன். நான் எப்போதும் கேட்டதிலேயே, மிகச் சிறந்த ஜெபத்தை தேவனிடம் ஏறெடுத்தான் என்று விசுவாசிக்கிறேன். அவன் தேவனை மறந்து விடுவான் என்பதற்காக தேவன் தன்னை மிகவும் ஐசுவரியவானாக்க வேண்டாம் என்றும் அவன் (தரித்திரனாகி) திருடாதபடிக்கு தன்னை தரித்திரனாக்கி விடாதபடிக்கும் தேவனிடம் விண்ணப்பித்தான்.

நீ இதை விசுவாசிக்கிறாயா?, 51-0506 A, பத்தி எண் **E–25**

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

தேவன் ஜெபத்திற்குப் பதிலளிக்கிறாரா? ஆம். அவர் துரிதமாக பதிலளிக்கிறாரா? எல்லா நேரங்களிலுமல்ல. அவர் அப்படி செய்கிறாரா? இல்லை. சில நேரங்களில் நம்மைக் காத்திருக்கச் செய்கிறார். அது சரியா? ஆனால் தேவன் ஜெபத்திற்குப் பதிலளிக்கிறார்.

--------

மோசேயைக் குறித்த போதனை, 56-0513, பத்தி எண் 84

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**


ஜெபம் காரியங்களை மாற்றிப்போடுகிறது. ஜெபம் மரணத்திலிருந்து ஜீவனுக்குள் கொண்டு செல்கிறது. ஜெபம் வியாதியஸ்தர்களை சுகம் பெற்றவர்களாய் மாற்றுகிறது; பாவிகளைப் பரிசுத்தர்களாக்குகிறது. அது ஜெபமே.
விசுவாசம், 56-0427, பத்தி எண் E-5
வில்லியம் மரியன் பிரன்ஹாம்


வில்லியம் மரியன் பிரன்ஹாம்
ஜெபமானது ஒரு விசுவாசிக்கு அதைத்தான் செய்கிறது. அதுதான் நீ, உலகத்தை உன்னை விட்டு அகற்றிப்போடுகிறது...
------------------------
மோசேயைக் குறித்த போதனை, 56-0513, பத்தி எண் 197

...ஒவ்வொரு நாளும் குறைந்தபட்சம் ஒரு அதிகாரமாவது பரிசுத்த வேதாகமத்திலிருந்து படிக்க வேண்டும்; பின் ஜெபிக்க வேண்டும். பாருங்கள்? எப்போதும் அதை செய்யுங்கள்.

-----------

தேவன் தம்முடைய வரங்களைக் குறித்து சாட்சி பகருதல், 52-0713 E, பத்தி எண் E-11

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

அன்பான நண்பர்களே, நான் உங்களுக்கு கூறுவது என்னவென்றால், முக்கியமான காரியங்களில் தேவனுடைய சித்தத்தை அறிய வேண்டிய சிறந்த வழி ஜெபமே. பாருங்கள்?

-------------

கேள்விகளும் பதில்களும், 61-1015 M, பத்தி எண் 163



ஒரு பரிசுத்தவானை அவனுடைய ஜெபத்திலிருந்து உன்னால் மறைக்க முடியாது. மனிதன் எப்போதும் பெற்றிருந்ததிலேயே வல்லமையான ஆயுதம் அதுதான்.

-------------

தேவன் தம்முடைய வார்த்தையில், 57-0323, பத்தி எண் E-8



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்



உங்களுக்காக மட்டுமே ஜெபிக்காதீர்கள்; மற்றவர் களுக்காக ஜெபியுங்கள். தேவன் ஜெபத்தைக் கேட்கிறார். நீங்கள் எதைக் குறித்து ஜெபிக்கிறீர்கள் என்பதை அவர் அறிவார்.

---

**நாம் தேவனை காண்போம், 59-1129, பத்தி எண் 191**

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**




ஒரு மனிதன் தனக்கு ஒரு மனைவியைத் தெரிந்து கொள்வதற்கு முன்பு, அவன் அதிகமாய் சிந்திக்கவும், ஜெபிக்கவும் வேண்டும்.

---------------------

ஒரு மணவாட்டியைத் தெரிந்து கொள்ளுதல், 65-0429 E, பத்தி எண் 47

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

**நீங்கள் இரகசியமாக ஜெபிக்கிறீர்களா? அந்த இடத்திலேயே தரித்திருங்கள். உங்களுடைய அறைகளுக்குச் செல்லுங்கள். எங்காவது ஒளிந்து கொள்ளுங்கள், கீழே முழங்கால்படியிடுங்கள், தேவனுக்கு முன்பாகக் காத்திருங்கள். அங்கேயே காத்திருங்கள்.**

-------------------

இயேசுவின் பட்சம் சேர்ந்திருத்தல், 63-1226, பத்தி எண் 110


உன்னுடைய நேரத்தையும் சமயத்தையும்
ஜெபத்திற்காக தியாகம் செய்.
உன்னுடைய ஜீவியத்தை தியாகம் செய்.
எதிர்பார்ப்பு, 61-0207, பத்தி எண் E-63
வில்லியம் மரியன் பிரன்ஹாம்

இயேசுவை உங்கள் வீட்டை விட்டு புறம்பாக்குவீர்கள் என்றால், குடும்ப ஜெபத்தை நிறுத்துவீர்களானால், வேதாகமம் வாசிப்பதை நிறுத்துவீர்களானால், உங்கள் வீடுகளில் இன்னும் இதுபோன்ற காரியங்களைச் செய்வீர்கள் என்றால், உங்கள் வீடுகளில் பிரச்சனைகள் வருவதைப் பார்க்கலாம்.

நீ இதை விசுவாசிக்கிறாயா?, 53-0906, பத்தி எண் E-72

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**



...எந்த நேரத்திலும் பிசாசு உங்களை மேற்கொள்ள விரும்புவான். அவனுடைய ஆளுகைக்குள் உங்களைக் கொண்டு வர விரும்புவான். உங்களுடைய ஜெப வாழ்க்கையை முறித்துப் போடுவீர்களானால், சகோதரனே, நீ ஒன்றுமில்லாது ஆகி விடுவாய். அது சரியா.

-------------

ஜீவனுக்காக தாகமாயிருத்தல், 57-0630, பத்தி எண் E-36

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

நம்முடைய ஜெபத்திற்குப் பதில் கிடைப்பதைப் பார்ப்பது வரையில், நம்முடைய ஜெபத்தை நிறுத்தக்கூடாது.

எதிர்பார்ப்பு, 61-0207, பத்தி எண் E-17

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**



# ஜெபத்திற்காக விடப்படும் ஓர் அழைப்பு

## சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

1

படங்களுடன்